



# கரோனா ஆத்திச்சூடி


**முனைவர் ஆ.இராஜேஸ்வரி**
உதவிப்பேராசிரியர்
கலைத்திட்ட வரைவு மதிப்பீட்டுத்துறை
தமிழ்நாடு ஆசிரியர் கல்வியியல் பல்கலைக்கழகம்
சென்னை - 97



*அணிந்திடுவோம் முகக்கவசம் கரோனாவை விரட்டிடுவோம்.*



*ஆனந்த வாழ்விற்கு தூய்மை போற்றுவோம்.*




*இடைவெளியை பின்பற்றி நம்மையும் சமூகத்தையும் காப்போம்.*




ஈவது ஆனாலும் எட்டியே நிற்போம்.



உண்மையை உறவுகளிடம் எடுத்துரைப்போம்.



ஊக்கத்தினை ஒருபோதும் கைவிடோம்



எளிய இயற்கை உணவை உண்போம்.



ஏற்புடைய உடற்பயிற்சியினை பழகுவோம்.



***ஐ****யம் தவிர்த்து ஆரோக்கியம் பேணுவோம்.*




***ஒ****ருமித்த கருத்துடன் அரசு அறிவுரையேற்போம்.*



***ஓ****ட்டிடுவோம் கரோனா, வென்றிடுவோம் கரோனா.*



***ஔ****வியமென்ற விலைமதிப்பில்லா பொக்கிசம்*

*நம் கரங்களில் என்பதனை உணர்ந்திடுவோம்.*